2. விதி 110–ன்கீழ் அறிக்கை

வீட்டுவசதி வாரிய மனைகள் ஒதுக்கீட்டில் முறைகேடுகள் நடந்துள்ளதாக ஜனதா கட்சித் தலைவர் திரு. சுப்பிரமணியம் சுவாமி தமிழக ஆளுநரிடம் மனு கொடுத்துள்ளது குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய மனைகள் ஒதுக்கீட்டில் விருப்புரிமையின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் முறைகேடுகள் நடைபெற்றதாகக் கூறி, முதலமைச்சராகிய என்மீது வழக்குத் தொடர தமிழக ஆளுநரிடம் ஜனதா கட்சித் தலைவர் திரு. சுப்பிரமணியம் சுவாமி அவர்கள் நேற்றையதினம் அனுமதி கோரியுள்ளார் என்று ஏடுகளில் செய்தி வந்துள்ளது.*

வீட்டுவசதி வாரியத்தின் வீடுகள் அல்லது மனைகள் ஆகியவற்றில் 85 சதவிகித வீடுகளை வீட்டு வசதி வாரியத்திற்கு விண்ணப்பம் செய்வோருக்கு குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யப்படுவதும், மீதியுள்ள 15 சதவிகித வீடுகள் மற்றும் மனைகளை அரசு, தனது விருப்புரிமையின்கீழ் ஒதுக்கீடு செய்யப்படுவதும், எல்லா ஆட்சிக் காலத்திலும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வரும் முறையாகும். அரசு தனது விருப்புரிமையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்த வீடுகளிலே முறைகேடு நடைபெற்றுவிட்டதாக திரு. சுப்பிரமணியம் சுவாமி சொல்லியிருக்கிறார்.

அரசு விருப்புரிமை ஒதுக்கீடு என்பது, ஏதோ இப்போது தி.மு. கழக ஆட்சியிலே மட்டும் நடைபெற்ற நிகழ்ச்சியல்ல. கடந்த பல ஆண்டுகளாகவே, நடைபெற்ற எல்லா ஆட்சிக் காலங்களிலும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் உருவாக்கப்படும் மனைகள், கட்டப்படும் வீடுகள் அனைத்தும் இப்போது போலவே விருப்புரிமை ஒதுக்கீடு என்பது நடைமுறையில் இருந்துவரும் ஒன்றாகும்.

[கலைஞர் மு. கருணாநிதி] [2011 பிப்ரவரி 8

அரசு தனது விருப்புரிமை ஒதுக்கீடான 15 சதவிகித இடங்களை, திருமணம் ஆகாத பெண்கள் (Single Women), கணவனால் கைவிடப்பட்டோர், கணவனை இழந்தோர், மாற்றுத் திறனாளிகள், சமூக சேவகர்கள், சமூகத்தில் சிறப்பு வாய்ந்தோர், தனியாக வசிக்கும் முதியோர் (Senior Citizen), பொது நிறுவனம் மற்றும் வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களில் பணிபுரிவோர், மத்திய அரசு மற்றும் மத்திய அரசு சார்ந்த நிறுவனங்களில் பணிபுரிவோர், பத்திரிகையாளர்கள், தேசியமயமாக ஆக்கப்பட்ட வங்கிகளில் பணிபுரிவோர், தேசியமயமாக ஆக்கப்பட்ட ஈட்டுறுதி நிறுவனங்களில் பணிபுரிவோர், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வாரியங்களில் (தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தைத் தவிர) பணிபுரிவோர், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் நகராட்சிகளில் பணிபுரிவோர், இராணுவத்தினர் மற்றும் முன்னாள் இராணுவத்தினர், விடுதலைப் போராட்டத் தியாகிகள், மொழிக்காவலர்கள், அப்பழுக்கற்ற அரசு ஊழியர் ஆகியோர்க்கு, விண்ணப்பங்கள் கைவசம் உள்ள மனைகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில், தமிழக அரசால் விருப்புரிமையைப் பயன்படுத்தி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

முற்பகல் 10-40

அரசு விருப்புரிமை ஒதுக்கீட்டின்கீழ் தரப்படும் வீடுகள் அல்லது மனைகள் சலுகை விலையில் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. குலுக்கல் முறையிலே விற்பவர்களிடம் பெறப்படும் தொகையை விட குறைவான தொகைக்கும் தரப்படவில்லை. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்- குடியிருப்புகளுக்கு அல்லது மனைகளுக்கு விலை நிர்ணயம் செய்யும்பொழுது வாரியம் நடைமுறையில் கடைப்பிடிக்கும் விலை (Ruling Rate), சந்தை விலை (Market Rate), பத்திரப் பதிவு அலுவலக வழிகாட்டி மதிப்பீட்டு விலை (Sub-Registrar's Office Guideline Rate) ஆகியவற்றுள் எது அதிகமோ, அதையே இறுதி விலையாக நிர்ணயம் செய்கிறது. அரசு விருப்புரிமை ஒதுக்கீட்டிற்கும், வாரிய ஒதுக்கீட்டிற்கும் ஒரே மாதிரியான விலை நிர்ணய முறைதான் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. தற்போது இந்த அரசின் சார்பில் விருப்புரிமை அடிப்படையில் மனை பெற்றோர், அந்தத் தொகை மிகவும் அதிகமாக உள்ளது என்று தெரிவித்து, அந்த மனையையே திரும்ப ஒப்படைக்கின்ற நிலைமையும் உள்ளது என்பதிலிருந்தே இதில் எந்தச் சலுகையும் செய்யப்படவில்லை என்பதை அறியலாம்.

மேலும், ஒதுக்கீடு பெறுவோர், வாரிய விதிமுறைகளின்படி விண்ணப்பப் படிவத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு தரும் உறுதிமொழியை அடிப்படையாகக் கொண்டே ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

அரசு விருப்புரிமை ஒதுக்கீட்டினால் அரசுக்கோ, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கோ எந்த வகையிலும் நிதியிழப்பு இல்லை. எல்லா ஆட்சிக் காலத்திலும் ஒரே மாதிரியான நடைமுறைகள், விதிமுறைகள்தான் பின்பற்றப்பட்டு வருகின்றன. விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டு அல்லது விதிமுறைகளை மீறி அரசு விருப்புரிமை ஒதுக்கீடுகள் நடைபெற்றதாகச் சொல்லப்படும் செய்தி விஷமத்தனமானது.

"விதிமுறைகளுக்கு உட்பட்டே அரசு ஒதுக்கீடு செய்யும். விதிமுறைகள் மீறப்பட்டிருந்தால் - குறிப்பிட்டுப் புகார் கொடுக்கப்பட்டால் - அரசு அதனைப் பரிசீலனை செய்து, அதில் உண்மை இருந்தால் நடவடிக்கை எடுக்கும்" என்று 7-12-2010 அன்றே செய்தியாளர்களிடம் நமது மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு. இ. பெரியசாமி விளக்கியுள்ளார்.

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலும் இதுபோல வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன. அ.தி.மு.க. ஆட்சியில் தலைமைச் செயலாளராக இருந்த திரு. என். நாராயணன், ஐ.ஏ.எஸ்.-க்கு 1993 ஆம் ஆண்டு 4,115 சதுர அடி; முன்னாள் அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் மகன் கே.எஸ். கார்த்தீசன் என்பவருக்கு பெசண்ட் நகர் பகுதியில் 1995 ஆம் ஆண்டு 4,535 சதுர அடி; முன்னாள் அமைச்சர் நாகூர் மீரான் துணைவியார் நூர் ஜமிலாவுக்கு கொட்டிவாக்கத்தில் 1993 ஆம் ஆண்டு 2,559 சதுர அடி; நாடாளுமன்ற உறுப்பினர் தம்பிதுரை மனைவி டாக்டர் பானுமதி தம்பிதுரைக்கு அண்ணா நகரில் 7 கிரவுண்ட் நிலம்; அ.தி.மு.க.-வின் தொழிலாளர் பேரவைக்கு அண்ணா நகரில் 3 கிரவுண்ட் நிலம்; அ.தி.மு.க.-வின் முன்னாள் அமைச்சர் எஸ்.எம். வேலுச்சாமியின் மனைவி திருமதி பானுமதிக்கு கோவையில் 1993 ஆம் ஆண்டு வீடு; 2004 ஆம் ஆண்டு தேவாரம், ஐ.பி.எஸ்., கே. விஜயகுமார், ஐ.பி.எஸ்., ஆர். நடராஜ், ஐ.பி.எஸ்., உட்பட பல ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்கு சோழிங்கநல்லூரில் தலா 4,800 சதுர அடி; நீதியரசர் எஸ்.ஆர். சிங்காரவேலு அவர்களுக்கு 2005 ஆம் ஆண்டு சோழிங்கநல்லூரில் இரண்டு மனைகள், சட்டமன்ற

உறுப்பினராக இருந்த கே. செல்வராஜ் என்பவருக்கு 1994 ஆம் ஆண்டு கொட்டிவாக்கத்தில் 2,692 சதுர அடி; முன்னாள் முதலமைச்சரிடம் துணைச் செயலாளராக இருந்த டி. நடராஜன், ஐ.ஏ.எஸ்.-க்கு 1995 ஆம் ஆண்டு திருவான்மியூரில் 6,784 சதுர அடி; ஆதி. ராஜாராமுக்கு 1995 இல் 3,101 சதுர அடி; 1993 இல் சட்டமன்ற உறுப்பினராக இருந்த சரஸ்வதிக்கு அண்ணா நகரில் 880 சதுர அடி; சட்டப் பேரவை உறுப்பினராக இருந்த மல்லிகாவுக்கு அண்ணா நகரில் 950 சதுர அடி; திரு. எம்.ஜி.ஆருடைய ஓட்டுநர் பூபதிக்கு நந்தனத்தில் 3,600 சதுர அடி; எஸ். ஆண்டித் தேவரின் மனைவி பிலோமினாவுக்கு 1994 இல் மதுரையில் 1,500 சதுர அடி என்று ஒரு நீண்ட பட்டியலே உள்ளது. 2005 ஆம் ஆண்டு பலருக்கு இரண்டு மனைகள் கொடுக்கப்பட்ட நீண்ட பட்டியலும் உண்டு.

இன்னும் சொல்லப் போனால் தமிழகத்திலே அரசின் சார்பில் விருப்புரிமை அடிப்படையில் இதுபோல அரசாங்கம் விரும்புவோருக்கு வீடுகளை, மனைகளை வழங்கலாம் என்ற முடிவே அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலேதான் எடுக்கப்பட்டு, அதற்கான அரசாணை 25-1-1979-இல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10-45

முதன்முதலில் இதைத் தொடங்கியபோது 10 சதவீத வீடுகள் அல்லது மனைகள் என்பதற்கு மாறாக 1991-1996-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 15 சதவீத வீடுகளை அல்லது மனைகளை அரசு தனது விருப்புரிமை அடிப்படையிலே வழங்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டது.

உண்மை இவ்வாறிருக்க, திரு. சுப்பிரமணியம் சுவாமி அவர்கள் விஷமத்தனமாக இந்தச் செய்தியைத் திரித்து வெளியிட்டிருப்பது உள்ளபடியே வருந்தத்தக்கது; நடவடிக்கைக்கு உரியது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.